**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 10 March 2021

# பாலின சமத்துவம் மேம்பட மனப்பாங்கு மாறவேண்டும்: அமைச்சர் சண்முகம்

சிங்கப்பூரில் ஆண்-பெண் சமத்துவம் மேம்பட மனப்பாங்கு மாறவேண்டும் என்றும் அதற்கு இன்னும் அதிகம் செய்ய வேண்டியுள்ளது என்றும் சட்ட, உள்துறை அமைச்சர் கா.சண்முகம் தெரிவித்துள்ளார். சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் தெம்புசு கல்லூரியில் நேற்று முன்தினம் பெண்கள் குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சி இடம்பெற்றது. அப்போது, பாலின சமத்துவத்திற்காக சட்டத்திருத்தம் கொண்டு வருவது சாத்தியமா என்று மாணவர் ஒருவர் கேட்டார். அதற்குப் பதிலளித்த அமைச்சர் சண்முகம், அப்படி ஓர் அம்சம் அரசியலமைப்புச் சட்டத்தில் இருக்க வேண்டும் என்பது தமது தனிப்பட்ட விருப்பம் என்றார். ஆயினும், அப்படியொரு சட்டத்திருத்தத்தை எளிதாக மேற்கொண்டுவிட முடியாது என்றும் அதற்குமுன் பல்வேறு விளைவுகள் குறித்து மதிப்பிட வேண்டும் என்றும் அவர் சொன்னார். சிங்கப்பூரில் பெண்களில் நிலை என்று பார்த்தால், மூன்றில் இரண்டு பங்கு அல்லது அதற்கும் சற்று அதிகமாக முன்னேற்றம் தென்படுகிறது என்று திரு சண்முகம் குறிப்பிட்டார். எடுத்துக்காட்டாக, பெண்கல்வியில் சிங்கப்பூர் சிறப்பாகச் செய்து வருகிறது என்ற அவர், பெரியவர்களான பின் பல்வேறு பொறுப்புகளையும் கையாள அவர்களுக்கு உதவுவது என்பது தொடர்ச்சியான பணி என்றும் கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.